கிடைத்துக் கொண்டிருக்கக்கூடாது. இங்கே பினாமி என்று சொன்னார்களே அப்படிப்பட்டவர்களுக்கு கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால்தான சட்டங்களை திருத்தி மாற்றியமைத்து, கீழே இருக்கிறவர்களுக்கு கிடைப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்த வேணடும். குடிசைத் தொழில் போல மாற்றி விட வேண்டுமென்று அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் போக்குவரத்து வசதியைப் பெற்றுள்ள கிராமங்கள்.

* வினா எண். 1043— திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-ம் ஆண்டிலிருந்து 1981 சனவரி முடிய தமிழகத்தில் எத்தனை கிராமங்கள் போக்குவரத்து வசதியைப் பெற்றுள்ளன?

(ஆ) இதன்மூலம் பயனடைந்த மக்கள் தொகை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:

(அ) மற்றும் (ஆ) 1976-77 ஆம் ஆண்டு முதல் 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் வரை 3,872 கிராமங்கள் பேருந்து வசதி அடைந்திருக்கின்றன. இதனால் 72.41 லட்சம் மக்கள் பயன் அடைந்தனர்.

திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு தலைவரவர்களே, இராம இராஜ்யத்தை கண்டு அடையும் புரட்சித் தலைவர் ஆட்சியில் பஸ் வசதி இல்லாத கிராமமே இல்லை என்கிற அளவில் 85 ஆம் ஆண்டிற்குள் கிராமங்கள் அத்தனைக்கும் பஸ் வசதி செய்து கொடுத்து விடுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எல்லா கிராமங்களுக்கும் பஸ் வசதி செய்து தரவேண்டுமென்று உணர்வோடு தான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. மூன்று ஆண்டு காலத்திலே எல்லா இடங்களுக்கும் பஸ் வசதி செய்து கொடுத்து விட வேண்டுமென்று நாம் ஒரு குழுவை அமைத்து ஏற்பாட்டை செய்திருக்கிறோம். இருந்தாலும் கூட இந்த குழு அமைப்பதன் மூலம் நடவடிக்கை எடுக்கப் படாமலும், நான் ஏற்கனவே சொன்னதையே திருப்பி, திருப்பி சொல்வதாக கூட நினைப்பீர்கள், போக்குவரத்து கழகங்கள் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருப்பதால் அதிலே கொஞ்சம் சுணக்கம் ஏற்பட்டிருக்கிறதே ஒழிய, அரசாங்கத்தினுடைய எண்ணத்திலே கருத்திலே, வேகத்திலே எந்தவிதமான சுணக்கமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சுதந்திரம் பெற்ற இந்தியாவில் காந்தியின் கனவை நிறைவேற்றுகிற வகையில் நகர்புறத்தில் கிடைக்கும் வசதிகள் அத்தனை

1981 மே 14]

யும் கிராமத்திலும் கிடைத்திட பாடுபடும் புரட்சித் தலைவரை காந்தியடிகள் அடிக்கடி சந்தித்து, வாழ்க என்றும், புரட்சித் தலைவர் தான் தமிழகத்தை ஆள வேண்டுமென்றும் சொல்வதை இந்திய நாட்டுக்கு இந்த அரசு அறிவிக்குமா?

(பதிலில்லை)

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது கிராமங்களுக்கு எல்லாம் போக்குவரத்து வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற நோக்கோடு அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. 30 கிலோ மீட்டருக்குள்ளே எங்கெங்கு தேவையோ அங்கெல்லாம் டெப்போக்களை திறந்து கிராமங் களுக்கு போக்குவரத்து வசதி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாங்கள் நகரப் பேருந்துகளை 30 கிலோ மீட்டராக ஆக்கி இருக்கிறோம். ஒரு இடத்திலிருந்து, இன்னொரு இடத்திற்கு 30 கிலோ மீட்டருக்கு இடையிலே ஒரு டெப்போ அமைப்பதன் காரணமாக, அங்கே போய் வருகிற பேருந்து இரண்டு டெப்போக்களைத் தொட்டுச் செல்லும். இது தேவையில்லை என்பதால் தான் 50 கிலோ மீட்டர் அல்லது 60 கிலோ மீட்டர் குறைந்தபட்சஇடைவெளி இருக்க வேண்டுமென்று ஏற்பாட்டை செய்திருக்கிறோம். கடந்த 27 ஆம் தேதி நான் அறிவித்தபடி ஏறத்தாழ தமிழகத்திலே டெப்போக்களை அமைக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்படி ஆண்டுக்கு கொஞ்சம் எல்லா முக்கியமான இடங்களிலும் டெப்போ அமைப்பதன் மூலமாக நகரப் பேருந்துகளை கிராமங்களில் விட முடியும்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தரலைவரவர் களே. கிராமங்களில் பஸ் விடுவதை பொறுத்தவரையில், தன்னிறைவுத் திட்டம் ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுவதை போல பின்தங்கிய மாவட்டங்களில் பஸ் என்றால் என்னவென்றே தெரியாத இடங்கள் இருக்கின்றன. குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி கிராமத்தில் பஸ்ஸை பார்க்காத கிராமங்கள் இருக்கின்றன. இதுபோன்ற பகுதிகளுக்கு தன்னிறைவுத் திட்டத்தை போல, பின்தங்கிய மாவட்டங்களில் பஸ் விட அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பின்தங்கிய மாவட்டங்களில் இருப்பவர் களுக்குத் தான் பஸ் வசதி செய்யவேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. எல்லோருக்கும் பஸ் வசதி கிடைக்கவேண்டும் என்று தான் செயல்படுகிறோம். அதற்காகத்தான் ஒரு குழுவை அமைத்து கிராமத்திலே இருக்கிற மக்களுக்கு பஸ் வசதி கிடைக்க வேண்டுமென்ற ஏற்பாட்டை செய்து கொண்டிருக்கிறோம். நான் பலமுறை சட்ட மன்றத்திலே சொன்னதை போல நீங்களும் இப்போது சொல்லியிருக்கிறீர்கள்; பஸ் வசதி இல்லாமல் கஷ்டப்

படுகிறார்கள் என்று சொல்கிறீர்கள். ஏற்கனவே பஸ் வசதி பெற்றவர்கள் இன்னும் கொஞ்சம் தியாகம் செய்தாக வேண்டும். கொஞ்சம் கட்டணம் உயர்த்தினால் கூட அதை பொறுத்துக் கொண்டால் தான் பின்தங்கிய இடங்களிலும் இருக்கிற மக்களுக்கு பேருந்து வசதியை நாம் விரைவாக கொடுக்க முடியும். இல்லை யென்று சொன்னாலும் கொஞ்சம் காலதாமதம் ஆவதற்கு வாய்ப்பு இருக்கிறது ஒன்றிரண்டு வருடங்கள் வரையில் அவர்கள் சிரமப்பட வேண்டியிருக்கும் என்று நான் பலமுறை சட்ட மன்றத்திலேயே எடுத்துத் தெரிவித்திருக்கின்றேன். அதற்கு நீங்கள் ஏதாவது வழிவகை செய்தால் தான் வேகமாக செய்ய முடியும், அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை நீங்களே சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி : புதிய வழித்தடங்கள் வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகள் கிராமங்களுக்காக வேண்டும் என்று கோரிக்கைகள் விடப்படுகின்றன. லாப நோக்கத்தோடு செயல்படக்கூடிய வழித்தடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து லாபம் இல்லாத வழித்தடங்களை தனியார்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அங்கே தான் பிரச்சினை வருகிறது. நாம் சட்டமன்றத்திலே அப்படி அறிவிப்பை செய்வோமானால் நீதிமன்றமே ஒத்துக்கொள்ளாது. எனவே அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு நாம் போகமுடியாது. பொது மக்களின் வசதிக்காக அவர்களுடைய வசதிக்காக தனியார் துறை யாக இருந்தாலும்சரி, போக்குவரத்துக் கழகமாக இருந்தாலும் சரி, போட்டி போட்டுக்கொண்டு செய்யவேண்டுமென்றுதான் இயங்குகின்றனவே தவிர லாபத்தை ஈட்ட வேண்டுமென்ற முறையிலே அல்ல. தனியார்களை நட்டத்திற்கு தள்ளவேண்டு மென்ற நோக்கமோ அல்ல, யார் யாருக்கு எது அமைகிறதோ அதைச் செய்கிறோம். பொது மக்களின் வசதிக்காக செய்கிறோம், லாபம் ஈட்டவேண்டுமென்ற நோக்கம் இல்லை, கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்றால் லாபத்திற்காக அல்ல. நிறையப் பேருந்துகளை வாங்கி பொது மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பதற்காகத்தான். லாபத்தைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, கிராமங் களுக்கு அதிக பஸ்கள் விடவேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய கொள்கை, திட்டம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள். தற்போது அரசாங்கம் நகரப் பேருந்துகளை 25 கிலோ மீட்டர் என்பதை 30 கிலோ மீட்டர் வரை விடலாம் என்ற அறிவிப்பு வந்து 6 மாதம் ஆகிறது. உடனடியாக அனைத்து நகரப் பேருந்துகளையும் 30 கிலோ மீட்டர் வரை செய்வதற்கான முறையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா? அதிலே குறிப்பாக வரக்கூடிய ஜூன் 30 தேதிக்குள் அனைத்து நகரப் பேருந்து

1981 மே 14]

களையும் 25 கிலோ மீட்டர்கள் செல்லக்கூடிய பேருந்துகளை 30 கிலோ மீட்டர் வரையில் செல்லலாம் என்று கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நம் போக்குவரத்துச் சட்டப்படி 30 கிலோ மீட்டர்க்கு மேலும் நகரப் பேருந்துகளை இயக்கக்கூடாது என்று சொல்கிறோமே தவிர கட்டாயம் 30 கிலோ மீட்டர் வரை இயக்கியாக வேண்டும் என்று சொல்ல சட்டத்திலே வழிவகை இல்லை. 30 கிலோ மீட்டர் வரையில் இயக்கலாம் என்று சட்டத்தை போடுகிறோம். எனவே தமிழகத்திலே எந்த எந்தப் பகுதிகளிலே அப்படி இருக்கலாம் என்று கருதுகிறார்களோ அப்படி அவர்கள் இயக்கிக் கொண்டு இருக்கிறார்கள். அரசாங்கப் போக்குவரத்துக் கழகங் களைப் பொறுத்த வரையில் 30 கிலோ மீட்டர் வரையில் பயன் படுகிற வகையில் நீட்டித்துக்கொள்ள உத்திரவு போட்டிருக் கிறோம். அதற்கேற்ப நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக் கிறார்கள். நீட்டிப்பதற்கு சில வழிமுறைகள் இருக்கின்றன. மீட்டிங் போட்டாக வேண்டும், எல்லோரையும் அழைத்தாக வேண்டும். அதிலே என்ன என்ன அப்ஜக்ஷன்கள் வருகின்றன என்பதைப் பார்த்தாக வேண்டும். அதற்குப் பின்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது அந்த அடிப்படையிலே செயல் பட்டுக் கொண்டிருக்கிறது. வெகு விரைவிலே அது முடிக்கப்படும்.

போக்குவரத்துக் கழகங்களின் அமைப்பு மற்றும் செயல்திறன் குறித்த பட்டாபிராமன் குழுவின் அறிக்கை.

*வினா எண் 1044—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரு பேருந்துக்கு 7.5 தொழிலாளர்கள் என்னும் நியதி இருக்க வேண்டுமென பட்டாபிராமன் குழு அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு இதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(இ) தற்பொழுது எத்தனை பேர்கள் ஒரு பேருந்துக்கு நியமனம் உள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பதில். (அ) ஆம். போக்கு வரத்துக் கழகங்களின் அமைப்பு மற்றும் அவைகளின் செயல்திறன் பற்றி ஆய்வுசெய்து அறிக்கை சமர்ப்பிக்க பட்டாபிராமன் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு ஒவ்வொரு பேருந்துக்கும் 7.5 என்ற முறையில் தொழிலாளிகள் இருக்கவேண்டுமென்று அறிக்கை கொடுத்திருக்கிறது.

(ஆ) இதன்மீது எல்லா போக்குவரத்துக் கழகமும் கடைப் பிடிக்கவேண்டுமென்று உத்திரவிடப்படுகிறது.